முருகப்பெருமான் துணை

**மகான் தருமராஜர் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

13.04.2023, வியாழக்கிழமை

1. தருமமுடன் தவ வாழ்வு தன்னை
தரணியோர்க்கு வேதமாக அருளும்
ஆறுமுக அரங்கமகா ஞானியே
ஆழ்வார்களை தொடர்ந்து பஞ்ச பாண்டவர்களும்
2. பாண்டவர்களும் அரங்கன் பெருமை
பாருலகமெல்லாம் பரவ வேண்டி
வேண்டியே அனுகூல ஆசிதனை
விளம்பிடுவோம் இந்தவித காலம்
3. காலமதும் சுபகிருது சேல் திங்கள்
கடையான முப்பான் திகதி குருவாரம்
(சுபகிருது வருடம் பங்குனி மாதம் 30 ம் நாள், 13.04.2023, வியாழக்கிழமை)
கோலமதாய் அனுகூலமாக தருமராஜனும்
கூறிடுவேன் உலகம் தருமபலம் அடைய
4. அடையவே கலியிடரை விரட்டி
அரும்பசி பிணி அனுகிடா
தடையற மக்களை நோக்கி
தருமம் வளர்க்கும் அரங்கன்
5. அரங்கன் அறநெறி தானும்
அகிலம் காக்கும் உயர் நெறி
வரங்கள் தந்து தருமராஜனும்
வல்லமை கூட்டி உடனிருக்கேன்
6. இருக்கவே குடிலின் அன்னதானம்
இறைபலம் கொண்ட அருளமுதாக
வருத்தம் வினைகள் வெல்லும்
வள்ளல் தன்மை தரும் சக்தியாக
7. ஆகவே நிரம்பி இருக்க
அரங்கன் குடிலனுகி அமுதை
வகைபட உண்டு ஆசிபெற
வணங்கி ஞானிகள் திருவடி பற்ற

8. பற்றவே நல்வினை பெருகும்
பாவம் பழி உணரும் வண்ணம்
ஆற்றலும் சூட்சுமமும் விளங்கி
அரங்கன் தரும் தீட்சை பலத்தால்

9. பலமிக்க ஞானவான்களாக
பண்பட்ட தொண்டர்களாக
சலனமிலா மாயைதனை வென்று
சர்வ பலமும் குருவருளே எனும்

10. எனும் தெளிவு திடம் கூடி
இவ்வுலகில் ஞானிகள் பூசை
ஞானமும் இனி பிறவாத வண்ணம்
நம்பிக்கை அழியாமையும் தரும்

11. தருகவே தருமபலம் கூடிட
தவராஜனின் தவபலமும் கிட்டிட
வருங்காலம் ஞானசித்தர் காலமாகும்
வல்லமை தரும் ஞான ஆட்சி மலரும்
அனுகூல ஆசி முற்றே

–சுபம்–